*ITCOT has been engaged for undertaking Techno Economic Feasibility Study for implementation of ropeway system at Arulmigu Vedagireeswarar Temple, Thirukkalukundram, Chengalpattu.*

- *News published in Dinamalar (30-10-2021)*

# வதேகிரீஸ்வரர் கோவில் குன்றுக்கு 'ரோப் கார்' ஏற்படுத்த ஆய்வு

**திருக்கழுக்குன்றம், அக். 30–**

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோவில் மலைக்குன்றுக்கு, 'ரோப் கார்' திட்டம் அமைக்க, நேற்று ஆய்வு நடத்தப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோவில், மலை மீது உள்ளது. பவுர்ணமி கிரிவல வழிபாட்டிற்கு பக்தர்கள் அதிகம் வருகின்றனர். 500 அடி உயர குன்றின் மேற்பரப்பில் அமைந்துள்ள கோவிலுக்கு செல்ல, 560 படிகள் உள்ளன.

முதியோர், பெண்கள், சிறுவர், கோவிலுக்குச் செல்ல படிகளில் ஏற இயலாமல் சிரமப்படுகின்றனர். ஊழியர்கள், கோவில் சென்று திரும்ப நீண்ட நேரமாகிறது. கண்காணிப்பை பலப்படுத்தவும் இயலவில்லை.

எனவே, மலையேற்றத்திற்கு, ரோப் கார் வசதி ஏற்படுத்த, பக்தர்கள் தொடர்ந்து வலியுறுத்தினர்.

இதை அரசு பரிசீலித்து, இவ்வசதி ஏற்படுத்துவதாக, அறநிலையை அமைச்சர் சேகர் பாபு, கடந்த சட்டசபை கூட்டத்தில் அறிவித்தார்.

தொடர்ந்து, திட்ட சாத்தியக்கூறு ஆய்வை 11.97 லட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள, 'இட்காட்' நிறுவனத்திற்கு, கோவில் நிர்வாகம் ஒப்பந்தம் அளித்தது.

இச்சூழலில், ரோப் கார் வசதி ஏற்படுத்த, தொழில்நுட்ப நிறுவனத்தினர், இத்திட்ட சாத்தியக்கூறு குறித்து, நேற்று முதற்கட்ட ஆய்வு நடத்தினர்.

செயல் அலுவலர் குமரன் கூறியதாவது:

தொழில்நுட்ப நிறுவனத்தினர், அறநிலையத்துறை பொறியாளர்களுடன், மலைக்குன்றுகளின் சுற்றுப்பகுதி, கோவில் உச்சிப் பகுதி என, பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பஸ் நிலையம் அருகில், சுப்பையா சுவாமி மடம் எதிரில், மலையடிவாரத்திலிருந்து ரோப் கார் வசதி ஏற்படுத்த சாத்தியக்கூறு உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். அடுத்து தொழில்நுட்ப ஆய்வு நடத்த உள்ளதாக தெரிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.



திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோவில் மலைக்குன்றுக்கு 'ரோப் கார்' ஏற்படுத்த, தொழில்நுட்ப குழுவினர் ஆய்வு செய்தனர்.